Teachingninja.in

Latest Govt Job updates

Private Job updates

Free Mock tests available

Visit - teachingninja.in

# TNPSC
# APP

## Previous Year Paper
### (Law) Paper-II
### 16 Jun, 2012

Teachingninja.in

Sl. No. 01005822

**DELB**

# 2012

# LAW — PAPER II

**( Criminal Procedure Code, the Evidence Act and the Civil Procedure Code )**

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

Duration : 3 Hours ] [ Maximum Marks : 100

அறிவுரைகள் / Instructions

( கீழ்க்கண்ட அறிவுரைகளை மீறும் விண்ணப்பதாரர்கள் தண்டிக்கப்படுவார்கள் )

( Candidates will be penalized for failure to comply with the following instructions )

1. இது ஒரு வினா-விடைத்தாள் தொகுப்பு ஆகும் மேலும் இதனுடன் OMR தாள் இணைக்கப்பட்டுள்ளது. OMR தாளை வினா-விடைத்தாள் தொகுப்பிலிருந்து தனியாக பிரிக்கக்கூடாது. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் அளிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் விடையளிப்பதற்கென கொடுக்கப்பட்ட இடத்திலேயே விடையளிக்க வேண்டும்.

   This is a question cum answer booklet having OMR sheet attached. Do not detach the OMR sheet from the question cum answer booklet. Space for each question is provided against each question. The candidate has to answer the question in the space provided.



Teachingninja.in

2. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவெண்களை வினா-விடைத்தாள் தொகுப்புடன் இணைக்கப்பட்டுள்ள OMR தாளில் அதற்கென வழங்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர ( வினாவிடைத்தாள் தொகுப்பு, வரைகட்டத்தாள், நிலப்படம் அல்லது சஞ்சிகைத் தாள்கள் உட்பட ) வேறு எந்த இடத்திலும் எழுதக்கூடாது. இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களின் வினா-விடைத்தொகுப்பு செல்லாததாக்கப்படும்.

Candidates should not write their Register Numbers anywhere ( including question cum answer booklet, graph sheets, maps or in the journal sheets supplied to them ) except in the place provided on the OMR sheet attached with the question cum answer booklet. The question cum answer booklet of the candidate, who violates this instruction, will be invalidated.

3. விண்ணப்பதாரர் பதிவு எண்களைத் தவறாக எழுதினால் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும். பதிவு எண்ணுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் பதிவு எண்ணை எழுதாமல் விட்டுவிட்டாலும் ஒரு மதிப்பெண் குறைக்கப்படும்.

A reduction of *one* mark will be made for writing register number incorrectly. A reduction of *one* mark will be made for the omission to write the register number in the space provided for it.

4. விண்ணப்பதாரர்கள் எந்தவொரு பயன்பாட்டிற்கும் அதாவது விடையளித்தல், வரைதல், அடிக்கோடிடல், சிறப்புப்படுத்திக் காட்டுதல் ( Highlighting ) உள்ளிட்டவற்றிற்கும், நீலம் அல்லது கருப்பு அல்லது கருநீலம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரே ஒரு நிற மையைக் கொண்ட மையூற்று எழுதுகோல் அல்லது பந்துமுனை எழுதுகோல் ( Fountain Pen or Ball Point Pen ) மட்டுமே வினா-விடைத்தாள் தொகுப்பு முழுவதும் பயன்படுத்த வேண்டும்.

Candidates should use only pen ( Fountain pen or Ball point pen ) with only any one of the three coloured inks viz., Blue or Black (or) Blue Black for all the purposes including answering, drawing, underlining, highlighting etc., in the entire question cum answer booklet.



Teachingninja.in

5. எந்த ஒரு பயன்பாட்டிற்கும் வரைகோல் ( Sketch pen ) அல்லது பென்சில் அல்லது வேறு எந்த எழுது கருவிகளையும் ( Writing devices ) உபயோகிக்கக்கூடாது. இந்த அறிவுரையை மீறுவோரின் வினா-விடைத்தாள்தொகுப்பு செல்லாததாக்கப்படும்.

Candidates should not use sketch pens, pencils or any other writing devices for any purpose. The question cum answer booklets of the candidates, who violate this instruction, will be invalidated.

6. வினாக்களுக்கு விண்ணப்பதாரர்கள் தமிழில் *அல்லது* ஆங்கிலத்தில் விடையளிக்கலாம். ஒரு பகுதி தமிழிலும் மறு பகுதி ஆங்கிலத்திலும் கூட விடையளிக்கலாம்.

Candidates have the option to answer the questions either in English or in Tamil. They are permitted to write even partly in English or partly in Tamil.

7. விண்ணப்பதாரர்கள் விடை அளிக்கும் போது ஆணை, தீர்ப்பு அல்லது கடிதம் முதலியவற்றிற்கும் கூட வினாவில் குறிப்பிட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே எழுத வேண்டும்.

While answering order, judgements or letter writing questions, candidates should use only the names and/or address given in the question.

8. விண்ணப்பதாரர்கள் தங்களது வினா-விடைத்தொகுப்பு வினாக்களில் குறிப்பிட்டுள்ள பெயர் மற்றும் முகவரி தவிர வேறு பெயர் அல்லது சுருக்கொப்பம் அல்லது முகவரி எழுதி இருந்தாலும் அல்லது விண்ணப்பதாரர் தனது பெயரையோ அல்லது தனது சுருக்கொப்பத்தையோ விடைத்தாளின் எந்த இடத்தில் எழுதியிருந்தாலும் அவர்களது வினா-விடைத்தாள்தொகுப்பு செல்லாததாக்கப்படும்.

The question cum answer booklet of the candidate will also be invalidated for writing candidate's name or initial anywhere in the question cum answer booklet or writing any other name or initial or address in the question cum answer booklet, other than given in the question.



Teachingninja.in

9. விண்ணப்பதாரர் தங்களது வினா-விடைத்தாள்தொகுப்பில் சம்பந்தமற்ற பொருத்தமற்ற குறிப்புகளை எழுதவோ அல்லது முறையீடு செய்யவோ அல்லது விண்ணப்பதாரரின் அடையாளத்தை குறிக்கும் வகையில் குறியீடு செய்யவோ அல்லது அதிக மதிப்பெண் அளிக்கக் கோரி தேர்வாளரின் பரிவைத் தூண்டும் வகையில் முறையீடு செய்யவோ கூடாது. மீறினால் அவர் அந்த பதவிக்கான நியமனத்திற்கு தகுதியற்றவராக்கப்படுவார்.

Candidates should not write irrelevant or impertinent remarks or any appeal or any marks revealing identity of the candidates or irrelevant matter including an appeal or invoking sympathy of the examiner for higher marks in the question cum answer booklet. The candidates who violate these instructions will be disqualified for that recruitment.

10. விண்ணப்பதாரர்கள் மற்றவர்களைப் பார்த்து எழுதுவது, மற்றவர்களுக்குத் தெரிவிப்பது, தேர்வுக்கூட கண்காணிப்பாளர் அல்லது மற்றவர்கள் உதவியை நாடுவது போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன. நுழைவுக் குறிப்பாணையிலும் கண்டிப்பாக எதுவும் எழுதக்கூடாது. மேலும் செல்லிடப்பேசி ( செல்லுலர் போன் ) அகவி ( பேஜர் ) துணுக்குகள் அல்லது துண்டுக் காகிதங்கள் ஆகிய எவற்றையும் தேர்வுக் கூடத்திற்குள் கொண்டு செல்ல அனுமதியில்லை.

Candidates are also prohibited from communicating or copying from one another or seeking the help of an invigilator or any outsider. Candidates are also strictly prohibited from writing anything on the memorandum of admission. They are also prohibited from carrying the cellular phone, pager, scrap or rough paper into the examination hall.

11. தங்கள் வினா-விடைத்தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்து விடக்கூடாது.

Do not tear off any leaves from your question cum answer booklet.

12. தேர்வுக்கூடத்தை விட்டு வெளியில் செல்வதற்கு முன்பாக தங்கள் வினா விடைத்தாள் தொகுப்பு மற்றும் OMR தாளை கண்காணிப்பாளரிடம் நேரில் ஒப்படைத்து விட்டுத்தான் செல்ல வேண்டும்.

Do hand over your question cum answer booklet and OMR sheet personally to the invigilator before leaving the examination hall.



Teachingninja.in

## பகுதி - அ / PART – A

வினா எண் 1 லிருந்து 3 வரை ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் 500 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும். வினா எண் (4) ல் ஒவ்வொரு சிறுகுறிப்பிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க வேண்டும்.

Answer any *two* from Question Nos. 1 to 3 ( Each in not more than 500 words ) and Question No. 4 is compulsory ( Each in not more than 150 words ).

( மதிப்பெண்கள் / Marks : ( 2 × 15 ) + 30 = 60 )

| | | |
|---|---|---|
| Q. | 1. | குற்றவியல் நீதிமன்றத்தால் சோதனை ஆணை எப்போது பிறப்பிக்கப்படலாம் ? அத்தகைய ஆணைகளை நிறைவேற்ற கடைபிடிக்கப்படும் நடைமுறை யாது ?<br>Under what circumstances can a search warrant be issued by the criminal court ? What is the procedure to be followed to execute such warrant ? |



| | |
|---|---|
| 2. | குற்றச்சாட்டு என்றால் என்ன ? மற்றும் அதன் செயல்நோக்கத்தை கூறுக. குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட வேண்டிய விவரங்களை சுருக்கமாக கூறவும்.<br>What is charge ? State its objects. State briefly the particulars to be mentioned in a charge. |



| | | |
|---|---|---|
| . | 3. | குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் மரண தண்டனை மற்றும் சிறைத் தண்டனை ஆகியவைகளை நிறைவேற்றுதல் மற்றும் நிறுத்தி வைத்தலுக்கும் உரிய விதிகளை சுருக்கமாக விளக்குக.<br>Explain briefly the provisions of criminal procedure code regarding execution and suspension of death sentence and sentence of imprisonment. |

Teachingninja.in

4. கீழ்கண்டவற்றுள் ஏதேனும் **ஐந்திற்கு** சிறு குறிப்பு ( ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் ) வரைக :

Write short notes on any *five* of the following ( Each not more than 150 words ) : 5 × 6 = 30

a) கைதுசெய்யப்பட்ட நபரை மருத்துவ பரிசோதனை செய்தல்
Medical examination of an arrested person.

b) போலீஸ் காவலில் வைத்தல்
Police custody.

c) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் இழப்பீடு
Compensation under CrPC.

d) முதல் தகவல் அறிக்கைக்குரிய சாட்சிய மதிப்பு
Evidentiary value of FIR.

e) மருராம் *எதிர்* இந்திய யூனியன் ( 1980 Cr LJ.1440 )
Maruram *vs* Union of India ( 1980 Cr LJ.1440 ).

f) விடுதலை தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு
Appeal against acquittel.

g) மகளால் பெற்றோருக்கு வாழ்க்கைப்படி
Maintenance to parents by daughter.

h) குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் சட்ட உதவி
Legal aid under CrPC.

**ELB**

## பகுதி - ஆ / PART – B

பின்வருவனவற்றுக்கு ( ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் ) விடையளி.

Answer the following ( Each in not more than 200 words ).

( மதிப்பெண்கள் / Marks : 2 × 10 = 20 )

5. 1. இந்திய சாட்சியச் சட்டத்தின்படி பிரிவு 27 ஐ விமர்சனத்தோடு விளக்கவும்.
Critically examine Section 27 under Indian Evidence Act.

*அல்லது / OR*

இந்திய சாட்சியச் சட்டத்தில் நீதி மன்றத்திற்கு பிரிவு 162 ன் கீழ் கொடுக்கப்பட்ட அதிகாரமானது அரசுக்கு பிரிவு 123 ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தினைக் காட்டிலும் விரிவானது ஆகும். விமர்சிக்கவும்.

The power vested with the court under Section 162 is wider than the power conferred on the Government under Section 123 of the Evidence Act. Comment.

Teachingninja.in

2. கீழ்க்கண்டவற்றுள் ஏதேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு ( ஒவ்வொன்றிற்கும் 100 சொற்களுக்கு மிகாமல் ) எழுதுக :

Write short notes on any *two* of the following ( Each in not more than 100 words ) : 2 × 5 = 10

a) மெய்ப்பிக்கப்பட்டது
Proved

b) உள்நோக்கம்
Motive

c) வெளிப்படையாக குறிப்பிடப்பட்ட நபரின் ஏற்புரை
Admission by person expressedly referred

d) புராதன ஆவணம்.
Ancient document.

Teachingninja.in

DELB

## பகுதி - இ / PART – C

கீழ்கண்டவற்றுள் ஏதேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் 200 சொற்களுக்கு மிகாமல் விடை அளிக்கவும்.

Answer any *two* of the following ( Each in not more than 200 words ).

( மதிப்பெண்கள் Marks : 2 × 10 = 20 )

| | | |
|---|---|---|
| Q. | 1. | உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 11 ன் முக்கிய நோக்கமானது ஒரு வழக்கிற்கு முடிவு என்பது வேண்டும் என்பது தான். விவரிக்கவும்.<br>The main object of Section 11 of the Civil Procedure Code is that there must be an end to litigation. Explain. |

DELB

| | | |
|---|---|---|
| Q. | 2. | நீதிமுறை விசாரணையிலிருந்து வரும் காரியம் என்றால் என்ன ? அது பொருந்தி அமைவதற்கான நிபந்தனைகள் யாவை ?<br>What is meant by 'Res sub judice' ? What are the conditions for its application ? |

DELB

| | | |
|---|---|---|
| Q. | 3. | *A* க்கு செங்கல்பட்டு தாலுகா கீரனூர் கிராமத்தில் உள்ள ஒரு நிலம் சொந்தமானது. அந்நிலத்தின் அருகிலுள்ள கிணற்றிலிருந்து ஒரு பகுதி தண்ணீர் எடுத்து விவசாயத்திற்கு பயன்படுத்த அவர் உரிமையுடையவர் ஆவார். 26. 07. 2007 அன்று *B* என்பவர் *A* வை குறிப்பிட்டுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து பயன்படுத்துவதை தடுத்தார். *A* ன் சார்பாக வாதுரையை தயார் செய்யவும்.<br>*A* owns certain lands situated at Chengalpattu Taluk, Keeranoor village and he is entitled to take and use a portion of the water from a well adjacent to his land for irrigating the said land. On 26. 07. 2007 *B* prevented *A* from taking and using the water from the said well.<br>Prepare a plaint on behalf of *A*. |

Teachingninja.in